1970 மார்ச் 5] [திரு. எம். ஆர். கண்ணன்]

கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையை அமைக்கவேண்டும் என்றோம். அது நடந்து வருகிறது.

கல்பாக்கம் திட்டத்தை வற்புறுத்தினோம். நடைபெறுகிறது.

சென்னைக்குக் காவிரி நீரைக் கொண்டுவரவேண்டும் என்றோம். சென்னைக்குக் காவிரி நீர் வந்துகொண்டிருக்கிறது. அதாவது, வீராணம் திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்துகிறோம். ஆக நாங்கள் தேர்தல் அறிக்கையில் என்ன என்ன சொன்னோமோ அவற்றைத்தான் செயல்படுத்தி வருகிறோம். எதையும் விட்டுவிட வில்லை. ஆசிரியர்கள், கிராமாதிகாரிகளின் நிலையை உயர்த்த வேண்டும் என்றோம். உயர்த்தி வருகிறோம்.

உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவுக்கட்டுப்பாட்டை எடுத் திருக்கிறோம். இன்னமும் கூட நான் சொல்வேன். 15 சதவீதம் வாங்கிக் கொள்வது என்கிற கட்டுப்பாட்டைக் கூடத் தளர்த்தி விடலாம். முழுக் கட்டுப்பாட்டையும் நீக்கி—அரசுக்கு அரிசி வாங்குகிறபோது டெண்டர் மூலமாக நல்ல ரக அரிசியையே வாங்கி வைக்கலாம். இதனால் கொஞ்சம் அதிகமாகச் செல வானாலும் கூட—சப்ஸிடி மூலமாக ஈடுசெய்துகொள்ளலாம். அப் படிச் செய்வதனால் இந்த 15 சதவீதம் கட்டுப்பாட்டினால் ஏற்படக் கூடிய ஒழுங்கீனங்கள் நடைபெறாதிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக, எங்கள் கட்சி மக்களுக்கு என்ன என்ன வாக்குறுதிகளைக் கொடுத்ததோ அவற்றைத்தான் செயல்படுத்தி வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு மேலும் பல நன்மைகள் செய்வதற்காக நாம் மத்திய அரசிடம் குவிந்திருக்கின்ற அதிகா ரங்கள் மாநிலங்களிடம் தரப்படவேண்டுமென்று சொல்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மத்தியிலும் ஒரே கட்சியின் அரசு, மாநிலத்திலும் ஒரே கட்சியின் அரசு என்று சொல்லிக்கொண்டு மத்திய அரசைத் தட்டிக் கேட்காமல் மக்களுடைய எண்ணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்த காரணத்தினால்தான் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டார்கள். நாங்கள் ஆட்சியிலே இருக்கின்றபொழுதும் சரி, இல்லாதபோதும் சரி மக்களுடைய உண்மையான எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற காரணத்தினாலே தான் நாங்கள் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறோமே ஒழிய, வீண் வம்புக்காக அல்ல. காலஞ்சென்ற முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வழிநின்று நாங்கள் ஆட்சி நடத்து கிறோம். இப்படிப்பட்ட பட்ஜெட்மீது பேசுவதற்கு ஒவ்வொரு வருக்கும் 10 நிமிடங்கள் 7 நிமிடங்கள் என்று கொடுத்தால் அது மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே அருள்கூர்ந்து சபைத் தலைவர் அவர்கள் இதையோசித்து ஓரளவுக்கு டைம் அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய கொள்கை அறிஞர் அண்ணாவின் வழி நின்று

பி.ப. 1-30

[திரு. எம். ஆர் கண்ணன்] [1970 மார்ச் 5

அயராது உழைப்போம் என்ற கொள்கை, அதிலே நாங்கள் திட்டமாக இருக்கிறோம். அண்ணா வழி நடப்போம். அண்ணாவழி என்றால் அதுதான் அறவழி, சிறப்பான வழி. ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுவோம். இந்தித் திணிப்பு எந்த முறையிலே எந்த அளவுக்கு வந்தாலும் அதை எதிர்த்தே தீருவோம் . . . (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் பேரவை ஒற்றிவைக்கப்பட்டு, மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பி.ப. 1–31 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 6 JUN 1971
MADRAS
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1970 மார்ச் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

முகமதியர்களுக்குச் சலுகை

*229 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மைனாரிட்டி முஸ்லிம் மக்களுக்கும், மற்ற சிறுபான்மை இன மக்களுக்குக் கொடுப்பது போல் கலாசார, உத்தியோக தொழில் சம்பந்தமான சலுகைகள் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'மைனாரிட்டி முஸ்லிம் மக்கள்' என்று குறிப்பிட்டிருப்பது, 'சிறுபான்மை மொழிகளில் ஒன்றாகிய உருது பேசும் மக்களைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரிகிறது. இம் மாநிலத்தில் இதர சிறுபான்மை மொழியினருக்கு, 14–3–1961-ம் நாளைய 455-ம் எண் (பப்ளிக்-பார்ட்டிஷன்-துறை) அரசு ஆணையில் தரப்பட்டுள்ள எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் தரப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இதர சிறுபான்மை மொழிபேசும் மக்களுக்குத் தரப்படும் சலுகைகள் இவர்களுக்கும் தரப்படுவதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் மற்ற சிறுபான்மை இன மக்களுக்குத் தரப்படுவதுபோல் இந்த முஸ்லிம் மக்களுக்கும் உத்தியோக, தொழில் சம்பந்தமான சலுகைகள் தரப்பட்ட புள்ளிவிவரம் மேசை மீது வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரிசன நலத் துறையின்கீழ் ஸ்காலர்ஷிப் வழங்கும்போதும் இந்த முஸ்லீம் இனத்தவர்களில் 'லப்பை' 'மாப்பிளா' என்ற பகுதியினர்கள், 'பிற்பட்ட வகுப்பினர் (பாக்வர்டு க்ளாஸஸ்) என்ற அளவில் அந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டு அவர்கள் தகுதிகள் பரிசீலிக்கப் படுகின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, 'லப்பை' என்று சொல்கின்றபோது, தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள் என்றுதான் குறிப்பிடுகிற ஒரு மரபு இருந்து வருகிறது. அங் கங்கே இருக்கின்ற அதிகாரிகள் சிலர், 'ராவுத்தர்', 'மரக்காயர்',